**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KANNIYAKUMARI AT NAGERCOIL.**

11.03.2026

O.S. No. 291/2022

P.W. 1 திரு. ஆரோக்கியதாஸ்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது தந்தை 1961 ல் எழுதி வைத்ததாக சொல்லும் உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது.

வா.சா.ஆ. 3 ஆக என் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணம் என்னவென்று சொல்ல முடியுமா என்றால் எனது அப்பா தாவா சொத்தை அடமானம் வைத்ததை காட்டும் ஆவணம். மீண்டும் ஆவணத்தை காட்டி கேட்டபோது அது செற்றில்மென்ட் பத்திரம் தான் தவறாக சொல்லிவிட்டேன் என்று சாட்சி சொல்கிறார். எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் 22.05.2016 ல் இறந்தார்.

எனது அப்பா இறக்கும்போது 1 ஆம் பிரதிவாதி அவருடன்தான் இருந்தார் என்றால் சரியல்ல. அப்பா இறப்பதற்கு முதல் நாள்தான் குன்னூரிலிருந்து அவர் வந்தார். எப்போது அவர் குன்னூருக்கு சென்றார் என்றால் மே 5 ஆம் தேதி சென்றார். அது வரையில் அவர்கள் சேர்ந்துதான் வாழ்ந்தார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 36, 37, 38, 39, 40 மற்றும் 41 ஆவணங்களில் வழக்கு பட்டிகை சொத்தில் சம்பந்தப்பட்ட சர்வே எண்கள் அதில் இருக்கிறதா என்றால் இருக்கிறது.

நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் அந்த ஆவணங்களில் தாவா சொத்திற்கான சர்வே எண்கள் சொல்லப்படவில்லை என்றாலும் அந்த ஆவணங்களுக்கும், இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றாலும் சரியல்ல.

வழக்கு எந்த சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களுக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் கணியாகுளம் கிராமம், சர்வே எண். 110/1, 110/3 மற்றும் 107/2 தொடர்பாக தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பட்டிகை சொத்தாக நான் கூறியுள்ள சர்வே எண்களுக்கும், தற்போது நான் சொல்லும் சர்வே எண்களுக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 42 மற்றும் 43 ஆவணங்களில் வழக்கு சர்வே எண்கள் இல்லை என்றால் சரியல்ல. தற்போது சாட்சி தாவா சர்வே எண்கள் மேற்சொன்ன வா.சா.ஆ. 36 முதல் வா.சா.ஆ. 43 வரையில் உள்ள ஆவணங்களில் இல்லை என்றும், அந்த ஆவணங்களை பிரதிவாதிகள் தனது அப்பாவின் பெயரில் எந்த சொத்தும் கிடையாது என்று கூறியதை மறுத்து சொல்லும் விதமாக அவர் பெயரில் வேறு சொத்துக்கள் இருந்ததை காட்டும் வகையில் தாக்கல் செய்துள்ளதாக கூறுகிறார்.

வா.சா.ஆ. 44 மற்றும் 45 ஆவணங்கள் 1 வது பிரதிவாதி தனது பெயரில் விலைக்கு வாங்கியதை காட்டும் ஆவணங்கள் என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 47 ஆவணம் 1 வது பிரதிவாதி ஏசுரெத்தினம், 2 வது பிரதிவாதி கிரேஸ்லெட், சிவதாணுபிள்ளை, ஐயப்பன்பிள்ளை, கனகஜயாபிள்ளை ஆகியோர் சேர்ந்து எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் வழக்கு

பட்டிகை சொத்து குறித்து எந்த விவரமும் கிடையாது என்றாலும் அவர்களுக்கு உரிமை பட்ட சொத்தை குறித்து ஆவணங்கள் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 48 ஆவணம் இந்த வழக்கு தொடர்பில்லாத சொத்து குறித்து 4 வது பிரதிவாதி எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். அடமானம் வைத்தது மற்றும் அடமானம் திருப்பியது ஆகிய ஆவணங்களில் எனது அம்மாவின் கையொப்பமும் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ஆனால் அடமானம் வைத்ததும், திருப்பியதும் எனது அப்பாதான்.

வா.சா.ஆ. 50 முதல் 64 வரையிலான வில்லங்கச் சான்றிதழ்கள் எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்றால் 11.11.2025 அன்று எடுக்கப்பட்டது. அன்றைய தேதியில் மேற்சொன்ன ஆவணங்கள் இருப்பது குறித்து எனக்கு தெரியவந்துவிட்டது என்றால் சரிதான். இந்த ஆவணங்களிலும் வழக்கு சம்பந்தப்பட்ட சர்வே எண்கள் கிடையாது என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 61 மற்றும் 62 ஆவணங்களில் நான் சொத்து விவரங்கள் சரியாக கொடுக்காததினால் எந்த வில்லங்கமும் காணப்படவில்லை என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதிக்கு எனது அப்பா சொத்தை எழுதி கொடுத்ததை நீதிமன்றத்திற்கு மறைக்க வேண்டும் என்பதற்காக சரியான விவரங்கள் கொடுக்காமல் அந்த வில்லங்க சான்றிதழை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்களை தாக்கல் செய்து இந்த நீதிமன்றத்தின் நேரத்தை வீணடித்தும், வழக்கின் தன்மையை மாற்றுவதற்காகவும், முயன்றுள்ளேன் என்றால்

சரியல்ல. இந்த வழக்கு சொத்திற்கும், எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

1961 ல் உள்ள செற்றில்மென்ட் பத்திரத்தின் அடிப்படையில் எனது அப்பா 1 ஆம் பிரதிவாதிக்கு சொத்தை எழுதி வைத்தார் என்றாலும் அதனால் எனக்கு அந்த சொத்தில் உரிமை கிடையாது என்றாலும் சரியல்ல, உரிமை உண்டு. இந்த வழக்கு பிரதிவாதிகளை கஷ்டப்படுத்துவதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. உரிமையே இல்லாத சொத்து குறித்து ஒரு வழக்கு தாக்கல் செய்து அதில் அத்துமீறி நுழைந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு உரிமை உள்ள சொத்தில்தான் நான் வசித்து வருகிறேன்.

**குறுக்கு விசாரணை (1 ஆம் பிரதிவாதி தரப்பில்) -**

மேலே செய்யப்பட்ட குறுக்கு விசாரணை தொடர்ச்சி 1 ஆம் பிரதவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.